DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | | |
|---|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 252/2024** |
| Deposition of Witness for | : PW 10 |
| Name | : சுந்தரராஜன் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 05.03.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 5th March2026.

**எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசுதரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை. நீதின்றம் சாட்சி தானாக அளிக்கும் சாட்சியத்தை பதிவுசெய்கிறது.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது தென்பழஞ்சியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் 02.03.2013 தேதியில் 21.30 மணிக்கு கைப்பற்றிய சொத்துக்கான அத்தாட்சியில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். சுமார் 12 வருடங்களுக்கு முன்பாக ஒரு நாள் இரவு 9.30 மணியளவில் தென்பழஞ்சியில் உள்ள என் வீட்டிற்கு அருகில் வைத்து போலீசார் விசாரித்தார்கள். அப்போது என்னிடம் கையொப்பம் ஒன்று பெற்றுக்கொண்டார்கள். மேற்கண்ட அத்தாட்சியில் கைப்பற்றப்பட்ட சொத்து என் முன்புக்கு கைப்பற்றப்படவில்லை. அத்தாட்சியில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியாது. வழக்கு பற்றி எனக்கு எதுவும்தெரியாது. **02.03.2013 தேதியில் 21.30 மணிக்கு கைப்பற்றிய**

**சொத்துக்களுக்கான அத்தாட்சியில் உள்ள முதலாவது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

போலீசார் என்னிடம் எதைப்பற்றி விசாரித்தார்கள் என்றால் எனது பக்கத்து வீட்டுக்காரரான ராஜேந்திரனிடம் விசாரித்துக்கொண்டிருந்தார்கள். நான் அருகில் இருந்ததால் என்னிடமும் விசாரித்தார்கள். என்னிடம் எதைப்பற்றி விசாரித்தார்கள் என்று ஞாபகம் இல்லை. 02.03.2013 தேதியில் 21.30 மணிக்கு கைப்பற்றிய சொத்துக்களுக்கான அத்தாட்சியில் என்னுடன் எந்த நபர் கையொப்பம் செய்தார் என்றால் ராஜேந்திரன் கையொப்பம் செய்தார்.

**மறுவிசாரணை இல்லை.**

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 252/2024** |
| Deposition of Witness for | : PW 11 |
| Name | : ராஜேந்திரன் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 05.03.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 5th March2026.

**எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசுதரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை. நீதின்றம் சாட்சி தானாக அளிக்கும் சாட்சியத்தை பதிவுசெய்கிறது.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது தென்பழஞ்சியில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். சாட்சி சுந்தரராஜனை எனக்கு தெரியும். அவர் எனது பக்கத்துவீட்டுக்காரர். என்னிடம் காட்டப்படும் 02.03.2013 தேதியில் 21.30 மணிக்கு கைப்பற்றிய சொத்துக்கான அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். சுமார் 10 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் இரவு தென்பழஞ்சியில் உள்ள என் வீட்டிற்கு அருகில் வைத்து போலீசார் மோதிரத்தை பற்றி என்னிடம் விசாரித்தார்கள். எனக்கு அது பற்றி தெரியாது என்று கூறினேன். பிறகு போலீசார் என்னிடம் கையொப்பம் போடச்சொன்னார்கள். அவர்கள் கேட்டுக்கொண்தற்கிணங்க நான் கையொப்பம் போட்டுக்கொடுத்தேன். அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. **02.03.2013 தேதியில் 21.30 மணிக்கு**

**கைப்பற்றிய சொத்துக்களுக்கான அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். 02.03.2013 தேதியில் 21.30 மணிக்கு கைப்பற்றிய சொத்துக்களுக்கான அத்தாட்சியில் என்னுடன் சேர்ந்த வேறு எந்த நபர் கையொப்பம் போட்டார் என்றால் யார் கையொப்பம் போட்டார் என்று எனக்கு தெரியாது. கையொப்பம் பெறப்படும்போது என்னிடம் போலீசார் மோதிரத்தை காண்பித்தார்களா என்றால் இல்லை.

**மறுவிசாரணை இல்லை.**

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 252/2024** |
| Deposition of Witness for | : PW 12 |
| Name | : குமரேசன் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 05.03.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 5th March2026.

**எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசுதரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை. நீதின்றம் சாட்சி தானாக அளிக்கும் சாட்சியத்தை பதிவுசெய்கிறது.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது செக்கானூரணியில் குடியிருந்து வருகிறேன். நான் பெட்ரோல் பங்கில் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் 04.03.2013 தேதியில் 12.00 மணிக்கு கைப்பற்றிய சொத்துக்கான அத்தாட்சியில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். சுமார் 13 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் மதியம் செக்கானூரணி பேருந்து நிலையத்திற்கு அருகில் கூட்டமாக இருந்தது. அங்கு போலீசாரும் இருந்தார்கள். அப்போது அங்கு கூட்டத்தில் இருந்து இருநபர்கள் யாரேனும் கையொப்பம் போடும்படி கேட்டார்கள். அதனால் நான் கையொப்பம் செய்தேன். நான் கையொப்பம் செய்து கொடுத்த பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. சாட்சி கணேசனை எனக்கு தெரியாது. **04.03.2013 தேதியில் 12.00 மணிக்கு கைப்பற்றிய சொத்துக்கான அத்தாட்சியில் உள்ள முதலாவது**

**கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.6 ஆககுறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். என்னிடம் போலீசார் கையொப்பம் பெறும்போது தங்க செயின் எதுவும் என்னிடம் காண்பித்தார்களா என்றால் இல்லை.

**மறுவிசாரணை இல்லை.**